



ாள் 2


திருவள்ளுவர் ஆண்டு 1979 ஐப்பசி 14
சென்னை, 30—10—48


# போர்க்களத்தில் மாநாடு: தளபதியின் தலைமை!

## பெரியார் நகரில் புரட்சிப் பட்டாளம்

### ஈரோட்டு மாநாட்டின் எழில்மிகு காட்சிகள்!

“இந்த மாநாட்டிலேயே மிக மிக முக்கியமான சம்பவம் எது என்று என்னைக் கேட்டால் தலைவர் பெரியார் அவர்கள் இப்போது ஆற்றி முடித்த திருவள்ளுவரைப் பற்றிய அரிய ஆராய்ச்சி உரைதான் என்பேன். ஏனெனில் இந்த உரையின் மூலம் பெரியார், திருக்குறளுடைய ஒப்பற்ற சிறப்பை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார் , என்பது மட்டுமல்ல, திருவள்ளுவருடைய இலட்சியங்கள் தமிழருக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை தெள்ளத் தெளிய விளக்கியிருக்கிறார் என்பது மட்டுமல்ல, இந்த உரையின் மூலம் அவர் நமக்கு 'ஒரு' கேடயத்தை அளித்திருக்கிறார். இது வரையில் சுயமரியாதைக்காரர்களாகிய நமக்கு 'சிந்தனை' என்னும் கூர்வாள் இருந்ததே தவிர, கேடயம் இல்லை என்பதை நாம் கொஞ்சம் வருத்தத்தோடு ஒப்பக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இனி நமக்கு அந்தக் கவலை இருக்கத் தேவையில்லை. இப்போது பெரியார் ஆற்றிய பேருரை நமக்கு அருமையானதோர் கேடயத்தை அளித்திருக்கிறது. அந்தக் கேடயம்தான் வள்ளுவர் தீட்டிய எழில் மிகு இலக்கியமாகிய திருக்குறள்.”



தன்னுடைய அந்த அருமையான வெண்கலநாத சங்கீதக் குரலாலே, அண்ணா, இந்த இன்ப வார்த்தைகளைக் கூறிவிட்டு மேலும் சொன்னார்:

“குறள், தமிழருடைய இருதய கீதம். குறள், தமிழருடைய வாழ்க்கை வழிகாட்டி. குறள் தமிழர் பண்பாட்டின் சின்னம். இத்தகைய குறள் இனி நமக்குக் கேடயம் என்னில், நாம் தொடுக்கும் போர் எதுவும் இனி வெற்றியைத் தவிர வேறு எதையும் நமக்குத் தர முடியாது என்பதில் யாருக்கும் ஐயம் இருக்கமுடியாது.

இனி, களம் நோக்கிச் செல்லும் தமிழ்க் காளைகள் ஒவ்வொருவர் கரத்திலேயும் குறள் மின்னும். பகைவர் கோட்டத்திலிருந்து நம்மீது வீசப்படும் கணைகள் ஒவ்வொன்றிற்கும் குறள் விடை சொல்லும். சிறைச் சாலையிலே இருக்கும் போது, குறள், நமக்குப் பெருந் துணைபுரியும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

விலை அணா 1½

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பர் ஆச்சாரியார் சிறைச்சாலையிலே இருந்த போதுதான் இராமாயணத்தைத் துருவித் துருவி ஆராய்ந்து படித்ததாகவும், அப்போது அதிலிருந்து அற்புதமான இராஜதந்திரக் கலையை, தான் கற்றுக் கொண்டதாகவும் அவர் முன்னர் ஓர் முறை பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார் என்பது. இராமாயணம் அவர்களுக்கு! குறள் நமக்கு! இராமாயணத்தில் இருக்கும் போர்முறைகள் நமக்குத் தேவையில்லை, அவை நேர்மை உள்ளம் படைத்த எவரும் கைக்கொள்ள முடியாதவை, ஆரிய வட்டாரத்திற்கு மட்டுமே ஏற்றவை, ஆனால் திருக்குறள் காட்டிடும் பாதையோ உலகம் முழுவதும் உள்ள நல்லறிவாளர்கள் எவரும் ஒப்புக்கொள்ளத் தயங்காதவை. இத்தகு குறளினை நமக்கு அளித்திருக்கிறார் பெரியார் நமக்குக் கேடயமாகப் பயன்பட! முன்னர் அவர் அளித்திருக்கும் சுயமரியாதைப் போர்வாளுக்குத் துணை புரிய!''

இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, **அண்ணா**, ஒரு கணம் தன் சொற்பொழிவை நிறுத்தினார். பிறகு சொன்னார், அழகாக, ஆணித்திறமாக:—

''ஒரு கரத்திலே சிந்தனை எனும் வாளையும், மறு கரத்திலே குறள் எனும் கேடயத்தையும் ஏந்தியவர்களாய், நாம், பாரைக் குலுக்கிய சோவியத் புரட்சி நடந்த இந்த அக்டோபர் மாதத்தில், களத்திலே இறங்குகிறோம். இனி நாம் தியாகப் பாதை வழியே சென்று, புரட்சிப் போர் பல புரிந்து, விரைவில், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்ட இன்பத் திராவிடம் எனும் இலட்சிய மாளிகையை அடைந்தே தீருவோம்.''

**அண்ணா**, இந்த உறுதி உரையைக் கூறிவிட்டு, மேலும் தொடர்ந்து பேசினார்:—

''அந்த இலட்சிய மாளிகையை அடைவதற்கான மகத்தான போராட்டத்தில் குதிக்கத்தான் நான் சிறை சென்று திரும்பியவர்களை அழைக்கிறேன், முன்னர் இரத்தம் சிந்தியவர்களை அழைக்கிறேன், தடியடி பட்டவர்களை அழைக்கிறேன், துப்பாக்கிக் குண்டுகள் வந்தாலும் எதிரே தம் மார்பைக் காட்டக்கூடிய மாவீரர்களை அழைக்கிறேன், நாட்டிலே உள்ள மற்றவர்கள் வேலாயுதங்களின் கதியை அடையாமல் இருப்பதற்காக தாம் வேலாயுதங்களாக ஆவதற்கும் துணிந்துள்ள தீரர்களை அழைக்கிறேன். பெரியார் குறிப்பிட்டதைப் போல, போலீசாரின் தடி தம் உடலைத் தாக்கிப் புடைக்கிறபோதும் அய்யோ அம்மா என்று கூவி இரையாமல் மௌனமாகப் பொறுத்துக் கொள்ளும் நெஞ்சு உரம் படைத்தவர்களை அழைக்கிறேன்.......... ..............''

அண்ணாவின் பேச்சு தொடர்கிறது. அதைத் தொடர்ந்து மக்கள் உள்ளம் விரைந்து செல்கிறது.

இறுக மூடிய இரு கரங்களையும் பின்னால் கட்டிக் கொண்டு, தளபதி என்னும் தன் தகுதிக்கேற்ற கம்பீரத்தோடு நின்று கொண்டு, பளிச் பளிச் என மின்னவிடும் அழகிய அகன்ற சிகப்பு பொத்தான்களைக் கொண்ட கருப்பு புஷ்கோட் புத்தொளி வீச வீச, எதிரே கடலெனத் திரண்டு குழுமி இருக்கும் அந்த ஆயிரமாயிரம் மக்களின் உள்ளம் கட்டுக் கடங்காத களிப்பாலே குதித்துக் கூத்தாட, பக்கத்தே வீற்றிருக்கும் பெரியார், தன் செல்வத் திருமகனின் செவ்விய உரை கேட்டுக் கேட்டுப் பூரிக்க, அண்ணா, ஒலிபெருக்கி முன் நின்று கொண்டு, சொல்லெல்லாம் செந்தமிழாய்ச் செழுந்தமிழாய்ச் சலசலவெனப் பாய்ச்சிய போது, அந்த அற்புத கீதம் மாநாட்டுப் பந்தல் முழுவதும், அதற்கு அப்பாலும், அதற்கு அப்பாலும் கூட, ஒலிபெருக்கிக் குழாய்கள் வழியாக கணீர் கணீர் என ஒலித்த போது, மலையிலே இருந்து விழும் அருவி மட மடவெனக் குதித்தோடும் குறுவிளையாட்டு மக்கள் உள்ளத்தில் வந்து நின்றது ஒருகணம். மறுகணம், கடலோரத்திலே, அலைகள் அடுக்கடுக்காக எழுந்தெழுந்து வீழ்ந்து மடிந்து சுருண்டு குதித்துக் கூத்தாடும் இன்ப நறுங் காட்சி கண் எதிரே நின்றது. மற்றோர் கணம், கீதம் இனிய குயில் பாடும் இசை முழக்கம் காதிலே வந்து பாய்ந்தது. வேறோர் கணம், படைத் தளபதி தன் படைவீரர்களைப் பார்த்து போர் போர் அறப்போர் என்று இடிமுழக்கம் புரிகின்ற நிலை வந்து நின்றது.

அப்பப்பா! சொல், அந்தச் சொல்லைச் சுற்றி நின்று குதித்துக் குதித்துக் கூத்தாடும் கருத்து, கருத்தின் நடனம் கண்டு களிப்பினால் நெஞ்சம் விம்மி, வாக்கிய அமைப்புகள் எனும் தோகைமயில்கள் பாடும் களிப்புச் சிந்து, இந்த ஆடலையும் பாடலையும் கண்டு அவற்றிற்கு ஏற்ற பெற்றி தாளம் போடும் எதுகை மோனை, இவ்வளவும் சேர்ந்துகொண்டு, அண்ணா, சொற்பொழிவாற்றும்போது என்னென்ன உணர்ச்சிகளை எவ்வளவு 'லளிதமாக' எழுப்பிவிடுகின்றன மக்கள் உள்ளத்தில்! வீரமா, இன்பமா, துன்பமா, சீற்றமா, உவகையா, எக்காளமா, எல்லா உணர்ச்சிகளும் ஒத்த உரிமையுடன் அல்லவா அவர் பேசும்போது மாறி மாறி வந்து போகின்றன!

மக்கள் உள்ளம் இந்த மாவீரரின் உரையிலே மிதந்து கொண்டிருந்தது. சொற்கள் அணி அணியாக வந்து கொண்டிருந்தன. லெனின் வாழ்க்கையில் ஒரு துண்டு, புரூடஸ் துரோகத்தில் ஒரு குறிப்பு, ஆச்சாரியார் ஆலாபனைகளில் இரண்டொன்று, ஆளவந்தார்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஒரு சூடு, ஆரிய ஏடுகளின் ஆணவத்திற்கு ஒரு கசையடி, இன்பத் திராவிடத்தின் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு கற்பனை, இனி வரும் போராட்டத்தின் கடுமை பற்றிய சிறு குறிப்பு—இப்படி, அவர் பேச்சு இடத்திற்கு இடம் தாவிக்கொண்டே இருந்தது. மக்கள் கேட்டுக் கொண்டே இருந்தனர். வாழ்க நம் தளபதி, வாழ்க நம் தளபதி என்ற மௌன வாழ்த்து எழுந்துகொண்டே இருந்தது. எங்கே இருக்கிறோம், எங்கிருந்து வந்தோம், இனி என்ன செய்வோம், என்பன போன்ற சலசலப்புச் சிந்தனைகள் ஏதுமின்றி, தம்மையே தாம் மறந்தவர்களாய், மக்கள், தளபதி அண்ணாவின் தமிழ் உரையைச் செவிமடுத்த வண்ணமிருந்தனர். இடையே ஒரு 'ஷாக்'! ஒரு சிறு மின்சாரத் தாக்குதல்! அண்ணா தன் குரலின் ஓசையைக் குறைத்தார். அடுத்த வாக்கியத்தில் இன்னும் குறைத்தார். அதற்கடுத்த வாக்கியம், ''ஆகையால் தோழர்களே என் பேச்சை இந்த அளவில் நிறுத்துகிறேன்'' என்பது! அண்ணாவின் பேச்சு முடிந்தது—மாநாட்டுத் தலைமையுரையின் முடிவுரை முடிந்தது.— மாநாடு முடிந்தது—நண்பர் ஈ. வி. கே. சம்பத் நன்றி சொல்ல எழுந்துவிட்டார்—தோழர் கருணாநிதியின் ''தூக்கு மேடை'' இன்னும் இரண்டு மணி நேரத்தில் மக்களைச் சந்திக்கும் என்ற அறிவிப்பும் தரப்பட்டுவிட்டது.

அண்ணா ஈரோட்டு மாநாட்டை ஒப்பற்றதோர் சொற்பொழிவின் மூலம் முடித்தார். அந்த முடிவுரை இருபத்தைந்து ஆண்டுகளாக நாட்டிலே பெரும் புரட்சிகளை நிகழ்த்திவரும் சுயமரியாதை இயக்கத்தின் அற்புதமான சுருக்கமாக இருந்தது.

முடிவுரையை சுயமரியாதை இயக்கத்தின் "எஸ்ஸென்ஸ்" மாத்திரை என்று சொன்னால் முன்னுரையை திராவிடர் கழக இலட்சியங்களின் சிறந்ததோர் படப்பிடிப்பு என்று சொல்லிவிடலாம்.

23-10-48 சனிக்கிழமை காலை ஈரோடு முனிசிபல் சத்திரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. 20000 பேருக்குமேல் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். மாநாட்டுத் தலைவர் அண்ணா அவர்களும், திறப்பாளர் குருசாமி அவர்களும் வரவேற்புத் தலைவர் பெத்தாம் பாளையம் பழனிசாமி அவர்களும் தோழியர்கள் குஞ்சிதம் அம்மையார் B. A. L. T., இந்திராணி பால சுப்ரமண்யம் ஆகியோரும் அழகியதோர் 'கோச்' ஒன்றில் அமர்ந்து செல்ல, முன்னே, பெரியார், சிங்க ஏறுபோல, புன்முறுவல் பூத்த முகத்தோடு, அப்படியும் இப்படியும் தலையை அசைத்த வண்ணம், அங்கும் இங்கும் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டு, பூரிப்பு மிகக் கொண்டவராய், புதியதோர் எழுச்சியும் உணர்ச்சியும் பெற்றார்போல நடந்துசெல்ல, ஊர்வலம் ஈரோட்டு வீதிகளை வலம் வந்தது.

மாலையில் மாநாடு தொடங்கிற்று. பந்தல் முழுவதும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம்! மேடை மீதோ தலைவர்கள் தளபதிகள் ஆகியோரின் ஈட்டம்! மேடையில் நடுவே அண்ணா அவர்கள் வீற்றிருந்தார். அவர் பக்கத்தே தலைவர் பெரியாரும், தமிழ்ப் பெரி ார் திரு. வி. க. வும், நகைச்சுவை அரசர் என். எஸ். ருஷ்ணனும் ஏனைய தலைவர்கள் தளபதிகளும் ற்றிருந்தனர்.

முதலில் நகைச்சுவை அரசரின் திராவிடநாட்டு ாழ்த்துப் பாடல்! என். எஸ். கே, தமது பக்க ாத்திய குழுவினருடன் ஒலி பெருக்கி முன் வந்து ன்றதும் மக்கள் மகிழ்ச்சிக் கடலில் நீந்திடலாயினர். ரே எக்காளம் பந்தலில்! நகைச்சுவை அரசர் மது இன்னிசை மூலம் தாம் நகைச்சுவையில் மட்டு ல்ல, இசைச் சுவையிலும் வல்லுநர் என்பதை நன்கு ிளக்கிக் காட்டிவிட்டார்.

**தோழியர் இந்திராணி அம்மையார்** திராவிடர் கழக ரட்சிக் கொடியை ஏற்றிவைத்த பிறகு, **ஆசிரியர் ஷ். குருசாமி** அவர்கள் அரியதோர் சொற்பொழி ாற்றி மாநாட்டைத் திறந்துவைத்தார்.

"நாம் ஒவ்வொருவரும் ஒரு பெரியாராக விளங்கவேண்டும். அங்க அமைப்பிலோ உருவம் நிறம் தோற்றம் ஆகியவற்றிலோ அவரைப் போல நாம் ஆகவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஓய்வு ஒழிவு என்பதே இன்றி சுழன்று சுழன்று புயல் காற்று வேகத்தில் சுற்றுப் பயணம் செய்து வருகிறாரே, அந்த ஓயாத உழைப்பிலும்கூட நாம் பெரியார் ஆவது என்பது இயலாத காரியம்தான். ஆனால் நினைத்த காரியத்தை உடனே சாதிப்பது, அதுவும் முழுவதாக சாதிப்பது, அதுவும் எத்தகைய எதிர்ப்புக்கிடையேயும் சாதிப்பது என்பதில் மட்டும் நாம் ஒவ்வொருவரும் பெரியாராகவே ஆகித்தான் தீரவேண்டும். அதுதான் தமிழர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அத்தலைவர் பெருந்தகைக்கு நாம் காட்டும் நன்றியறிதல்."

என்று ஆசிரியர் குருசாமி அவர்கள் கூறியபோது பெரியார் அவர்களிடம் அவருக்கிருக்கும் ஆழ்ந்த பற்றுதலும் நம்பிக்கையும் அன்பும் மதிப்பும் நன்கு புலப்படலாயின.

குருசாமி அமர்ந்தார். பெத்தாம் பாளையம் எழுந்தார்.

"நாம் பிரசாரம் செய்து செய்து அலுத்துவிட்டோம். இனி ஒன்றன்பின் ஒன்றாக வரிசை வரிசையாக, பலப்பல போராட்டங்களில் இறங்கிவிட வேண்டியதுதான் நமது முன்னணி வேலையே தவிர வேறில்லை. இப்போது எங்கு பார்த்தாலும் மறியல் ஏன் இன்னும் துவக்கவில்லை, ஏன் இன்னும் துவக்கவில்லை என்பதே பெரும் பேச்சாக இருக்கிறது, இனி ஒரு நாள்கூட தாமதிக்கக் கூடாது. போராட்டத்திற்கான நாள் குறித்துவிட்டு, வாழ்வு அல்லது சாவு என்ற ஒரே முடிவுடன் செயலில் குதித்துவிட வேண்டியதுதான்"

என்று **பெத்தாம்பாளையம் பழனிசாமி** அவர்கள் தன் வரவேற்புரையில் குறிப்பிட்டபோது, அந்த வீர உரையைச் செவி மடுத்த அனைவர் உள்ளமும் போர் போர் என்று எக்காளம் இடலாயின.

அந்த எக்காளம் மேலும் பல மடங்கு அதிகமாயிற்று **தோழர் E. V. K. சம்பத்** அவர்கள் பேச எழுந்ததும்! சிறை சிறை என்றால் நாம் என்னவோ ஏதோ என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம் அல்லவா? நண்பர் சம்பத் ஒரே வாக்கியத்தில் சிறைச்சாலையைப் படம் பிடித்துக்காட்டிவிட்டார். "**தேவையானபோது தேவையான சாமான்கள் தேவையானவர்களுக்குக் கிடைக்காது. அதுதான் சிறைச்சாலை.**" இந்த சிறைச்சாலை வியாக்யானம் பலமான கைதட்டுதலைப் பரிசாகப் பெற்றது. அந்தப் பரிசு பெற்றதும் சம்பத், மேலும் சொன்னார். "இந்த மாநாட்டிலும் காலைமுதல் மாலைவரை அதுதான் நடந்தது. சரியான நேரத்தில் உங்கட்கு உணவு கிடைக்கவில்லை. சரியான இட வசதிகளையும் உங்கட்கு நாங்கள் செய்து தரவில்லை. மாநாட்டுப் பந்தலும் போதிய அளவு பெரிதாயில்லை. உங்கட்குப் பல வகையிலும் சங்கடம்......" தோழர் சம்பத் இது போல, அடுக்கடுக்காக, வரிசை வரிசையாக, தமது வரவேற்புக் குழுவினரின் "திறமைக் குறைவை" எடுத்துச் சொல்லிக்கொண்டே, வந்தபோது, மேடை மீதிருந்த பல வரவேற்புக் குழுவினரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. என்னடா இந்த சம்பத் இப்படி நம்ம மானத்தை வாங்குகிறானே என்று அவர்களில் சிலர் வாய்விட்டுச் சொல்லியும் விட்டனர். சிலர் சம்பத்தை சபிக்கவும் செய்தனர். ஆனால் அனைவர் முகத்திலும் அடுத்த விநாடி புன்சிரிப்பு தாண்டவமாடலாயிற்று. ஆமாம், நண்பர் சம்பத். இறுதியில் வீசிய ஒரு வாசகம் வரவேற்புக் குழுவினரின் பெருமூச்சை புன்சிரிப்பாக மாற்றிவிட்டது!

"இவ்வளவு வசதிக் குறைவுகளும் ஏற்படும்படியாக நாங்கள் ஏன் நடந்துகொண்டோம் தெரியுமா? நீங்கள் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே சிறைவாசம், அந்த சிறை வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை உங்கட்கு எடுத்துக் காட்டத்தான்! இந்த மாநாட்டு

வசதிக்குறைவு ஒரு ஒத்திகை! வரப்போகும் சிறை வாழ்வுக்கான ஒத்திகை!"

என்று தோழர் சம்பத் சொல்லிமுடித்ததும் பந்தல் சடசடவெனச் சரிவதுபோன்றதோர் ஓசை ஏற்பட்டது. சம்பத்துக்குக்கூட அச்சம், பந்தல்தான் சரிகிறதோ என்று! திரும்பிப் பார்த்தார், பந்தல் சரிவதால் ஏற்பட்ட ஓசை அல்ல அது! அவருடைய சந்தர்ப்பத்திற்கேற்ற சாமர்த்திய வாதத்தைக் கண்டு மகிழ்ந்த மக்களின் கைதட்டும் ஆரவாரம்!

தோழர்கள் கே. கே. நீலமேகம், சேலம் சித்தையன், சென்னை ஜீவரத்தினம் ஆகியோர் முன்மொழிய, தலைவர் பெரியார் அவர்கள் பின்மொழிய, தளபதி அண்ணு அவர்கள் பந்தல் அதிர எழுந்த கைதட்டுதலுக்கிடையே மாநாட்டுத் தலைமை ஏற்று விரிவுரை ஆற்றினர்.

இறுதியில் கலைவாணர் என். எஸ். கே. காந்தியார் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

24—10—48 ஞாயிறு. காலை:—

தோழர்கள் என். வி. நடராசன், கே. வி. அழகர்சாமி, தலைவர் டி. பி. வேதாசலம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. நெடுஞ்செழியன், சி. டி. டி. அரசு, சேலம் சித்தையன் ஆகியோர், முறையே சிங்காரவேலர், நாகம்மையார், தியாகராயர், தாளமுத்து—நடராசன், பேராசிரியர் சுந்தரனுர், அர்ச்சுனன், செல்வம் ஆகியோர் படங்களைத் திறந்துவைத்தனர். அறிஞர் திரு. வி. க. அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றி திராவிடநாடு படத்தைத் திறந்துவைத்தார்.

மாலை: தீர்மானங்கள், தலைவர் முடிவுரை, நன்றி கூறல்.

தீர்மானங்களுக்குப் பிறகும், தலைவர் முடிவுரைக்கு முன்புமாக, பெரியார், அருமையானதோர் சொற்பொழிவாற்றி திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்தார். பல பெரும் பேராசிரியர்களின் உள்ளத்தையும் நெருங்க நடுங்கும் பல அதி தீவிரக் கருத்துக்களும் புரட்சிகரமான எண்ணங்களும் அந்தச் சொற்பொழிவில் சர்வ சாதாரணமாகச் சிரித்து விளையாடின. பல நுணுக்கமான ஆராய்ச்சிகளும் சிறப்பான அனுபவ உண்மைகளும் ஏராளமாகச் செறிந்துகிடந்தன அச் சொற்பொழிவில்! பெரியார் பெரும் புலவரல்ல! ஆனல் பெரும் புலவர்கட்கும் பாடம் கற்பிக்கத் தக்க அளவு நிபுணத்துவம் படைத்த இயற்கைத் தத்துவ ஞானி. ஆம்! "கல்கி" ஆசிரியர் கல்கி அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டதைப் போல அவர் உலகம் எனும் சர்வகலாசாலையில் முற்றுணர்ந்த பேராசிரியர் என்பதை அந்தச் சொற்பொழிவு அழகுற விளக்கி விட்டது.

**நவம்பர் முதல் தேதி முதல் ஐதராபாத் காரணமாக விட்டுப்போன அறப்போரை மீண்டும் தொடர்ந்து நடத்துவது** என்ற போர் முடிவோடு மாநாடு ஞாயிறு இரவு 8 மணிக்கு இனிது முடிவுற்றது.

முதல் நாளிரவு "மகாத்மாவின் தொண்டன்" நாடகமும், இரண்டாம் நாள் இரவு முரசொலி ஆசிரியர் கருணாநிதி—திருச்சி டி. கே. சீனிவாசன் குழுவினரின் "தூக்குமேடை" நாடகமும் மாநாட்டின் கலைப் பகுதிகளாக விளங்கி, மக்கள் உள்ளத்தில் சிறந்த கருத்துப் புரட்சியை விளைத்தன.

"**நாங்கள் உங்களிடத்திலெல்லாம் பயணம் சொல்லிக்கொள்வதற்காகத்தான் இந்த மாநாட்டைக் கூட்டி இருக்கிறோம்- இந்த மாநாடு முடிந்ததும் நாங்கள் எல்லாம் அநேகமாக கும்பல் கும்பலாகச் சிறை பிடிக்கப்பட்டுவிடுவோம் என்றே எதிர்பார்க்கிறேன். எனவே உங்களை எல்லாம் பார்த்து ஒரு வார்த்தை சொல்லவும் விடைபெற்றுக்கொள்ளவும்தான் இந்த மாநாடு ஏற்பாடாகி இருக்கிறது. இனி நாம் ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டுமானல் சிறையில்தான் சந்திக்க நேரிடும்.**" என்று பெரியார் அவர்கள் மாநாட்டுத் துவக்கத்தில் கூறிய வாசகத்தை ஒருவருக்கொருவர் நினைப்பூட்டிக் கொண்டும், "நான் தயாரப்பா சிறைச்சாலைக்கு! உன் சங்கதி என்ன அதைச் சொல்லு?', என்று ஒருவரை ஒருவர் சேதி விசாரித்துக்கொண்டும், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற **பாரதிதாசன்** பண்ணினை இசைத்துக் கொண்டும், "ஓமந்தூர் மந்திரி சபைக்குத் தலைவலியாமே, மெய்தானா?" என்று ஐயவினுள்ளுப்பிக்கொண்டும், நவம்பர் முதல் தேதி வர இன்னும் 6 நாட்கள்தான்—பிறகு தொடங்கிவிடும் போராட்டம் என்று நாட் கணக்கு பார்த்துக்கொண்டும், வட்டாரந்தோறுமிருந்து வந்திருந்த திராவிடப் பட்டாளங்கள் மறுநாள், தத்தம் படை வீடுகள் நோக்கித் திரும்பிடலாயின.

தளபதி அண்ணு அவர்கள் மேலும் ஒரு நாள் தலைவர் பெரியாரின் விருந்தினராக இருந்து, போராட்ட நடைமுறைகளைக் குறித்து அவருடன் விவாதித்து, செவ்வாயன்று சென்னை திரும்பினர்.

திராவிடக் கழக வட்டாரமெங்கும், போராட்டம், விட்ட இடத்திலிருந்து தொடங்கப்படுகிறது என்பது கேட்டு பெரு மகிழ்ச்சியும் நவம்பர் 2 என்று வரும் என்று ஏங்கித் தவிக்கும் ஆவல் உணர்ச்சியும் காணப்படுகிறது.

**வாழ்க ஈரோடு!**

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பிளவாக வளரும் என்றெண்ணி, அப்படி வளர்ந்தால் அந்தப் பிளவின் இடுக்கிலே தாம் கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டு ராஜபோக வாழ்வு வாழலாம் என்று எண்ணி ஆகாயக் கோட்டை பல கட்டினர். அந்தக் கோட்டைகளும் இடிந்து வீழ்ந்தன ஈரோட்டு மாநாட்டு மூலமாக! ஈரோடு, தலைவர்களுக் கிடையே பேதமூட்ட எண்ணிடும் பேதைகட்குத் தக்கதோர் பாடமாக இருக்கட்டும்!

"நமது அருமை அண்ணு அவர்களே இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று நிர்வாகக் கமிட்டி ஆசைப்பட்டது. இலட்சக் கணக்கான இளைஞர்கள் உள்ளத்திலும் அதே ஆசைகுடிகொண்டிருந்தது. என்னுடைய நெடுநாள் ஆசையும் அதுதான். அண்ணு அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கப் போகிறுர். தளபதி அண்ணுத்துரையை அறிமுகப்படுத்துவது என்பது அர்த்தமற்ற வீண் வேலை. ஒரு வேளை அவர் வேண்டுமானல் என்னை அறிமுகப் படுத்த வேண்டி இருந்தாலும் இருக்குமே தவிர நான் அவரை அறிமுகப் படுத்த வேண்டியது என்பது தேவையற்ற சங்கதி. நமது இயக்கத்திலும், குறிப்பாக இப்போது நடைபெற்றுவரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அவர் கொண்டி

(11-ம் பக்கம் பார்க்க)

# அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை!

## அறிஞர் திரு. வி. க. வின் வீரமுழக்கம்

ஈரோடு மாநாட்டில் தமிழ்க்கலைக் கடல் திரு. வி. க. அவர்கள் திராவிடநாடு படத்தைத் திறந்து வைத்த ஞான்று ஆற்றிய விரிவுரை:


தலைவர் அவர்களே, தோழர்களே, வணக்கம். நேற்று என்னுடைய கெழுதகை நண்பர் பெரியார் அவர்கள் தெரிவித்தபடி அவர்களைவிட யான் ஆறு ஆண்டுகள் இளையவன் ஆயினும் தோற்றத்தாலும் உடல் நிலையாலும் பிறவற்றாலும் அவரினும் பத்துப் பதினைந்தாண்டுகள்முதியவனாகவே யான் காட்சி தருகின்றேன். எனவேதான் யான் எழுச்சியாகவும் கிளர்ச்சியாகவும் பேச இயலவில்லை. அன்பர்கள் மன்னிக்க.

இன்று யான் திராவிடநாடு படத்தைத் திறந்து வைக்கப் போகின்றேன். திராவிடநாடு படத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை என் உள்ளத்தில் தோற்றுவித்தவர் உங்கள் அருமைத் தலைவரும் என் உழுவலன்பருமாகிய பெரியார் அவர்களே ஆகும்.

யான் திராவிடர் கழக உறுப்பினன் அல்லன். இன்றும் கதர் அணிபவன். இஞ்ஞான்றும் என் உடலை அணி செய்வது கதர் சட்டையே. இத்தகு நிலையில் நிற்கும் யான் திராவிடநாடு படத்தை இத் திராவிடர் கழக மாநாட்டில் திறக்கும் உரிமை பெற்றுள்ளேன். இஃது அறிவிக்கும் பாடம் என்னை? திராவிட நாடு என்ற எண்ணம் கட்சி வேற்றுமைகளைக் கடந்த ஒன்று என்பதே அன்றோ?

இந்த எண்ணம் என் உள்ளத்தில் தோன்றிய பிறகு யான் என்னென்னவோ சிந்தித்தேன். அந்த எண்ணங்களை எல்லாம் ஒன்று திரட்டினால் அது ஒரு பெரு நூல் ஆகும். இதன் முன் யான் இதுபற்றி இவ்வளவு சிந்தித்ததில்லை. ஆழ்ந்து சிந்தித்த பிறகு திராவிடநாடு பெற்றே தீர வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது.

திராவிடம் என்ற சொல் புதியது அன்று. ஆதி மொழியிலே மிகப் பழங்காலத்திலேயே அந்தச்சொல் வழங்கப்பட்டுள்ளது. வடமொழியிலும் அந்தச் சொல் உண்டு. பிராஹுய் மொழியில் மாசைசத்து டைப்பவன் என்ற பொருளில் அஃது காணப்படுகின்றது. மஹாராஷ்டிர மொழியில் பஞ்ச திராவிடம் என்று ஒரு குறிப்பு உண்டு. திருஞானசம்பந்தர் திராவிட சிசு என்று அழைக்கப்பட்டிருந்ததையும், சபாபதி நாவலர் என்ற பேரறிஞர் திராவிடப் பிரகாசிகை என்னும் பெயருடைய நூல் ஒன்றினைப் பல ஆண்டுகட்கு முன்னரே இயற்றி இருப்பதையும் ஈண்டு நினைவூட்டுகிறேன். இந்திய தேசீயப் பாட்டு என்று சொல்லப்படுகிறதே, எங்கு பார்த்தாலும் ஜனகணமன கம என்று பாடுகிறார்களே, கவிஞர் தாகூர் இயற்றிய கவிதை, அதிலே அவர் இந்தியாவில் உள்ள பல்வேறு இனங்களையும் நிரல் நிரலே சொல்லிக் கொண்டே போகிறபோது திராவிட உத்கல வங்கா என்னும் சொற்றொடர் ஓர் இடத்தில் வருகிறது. இதில் தென்னாட்டவர், தமிழர் தெலுங்கர் மலையாளியர் கன்னடர் என்று தனித்தனியாகக் குறிக்கப்படாமல் 'திராவிட' என்ற ஒரே சொல்லால் குறிக்கப்பட்டிருப்பது உன்னற்பாலது. புரபசர் சுந்தரம் பிள்ளை அவர்கள், தான் இயற்றிய மனோன்மணீயத்தின் பாயிரத்தில். திராவிட நல் திருநாடு என்று அழகுற மொழிந்திருப்பதை எவரும் அறிவர். எனவே திராவிடம் என்ற சொல் நீண்டநாட்களாக ஆட்சியில் உள்ள ஒன்றே அன்றி புதியது அன்று.



திரு. வி. க.

திராவிடநாடு தனி நாடாக இருத்தல் இயலுமா, தனித்து இருப்பதற்கு வேண்டும் அளவு பொருளாதாரம் அதற்குஉண்டா என்று சிலர் கடாவுகின்றனர். இது, அறியாதார் கூற்று. இந்தியாவிலேயே திராவிடநாட்டிலேதான் பொருளாதார பலம் அதிகம் அதிகம் அதிகம் என்று யான் கூறுவேன். திராவிடநாட்டில், மேற்கே, வரிசை வரிசையாக வரிசை வரிசையாக, இயற்கை அன்னை நமக்குத் தந்துள்ள மலைகள் இன்பக் காட்சி வழங்குகின்றன. கிழக்கே அஃதே போன்று கிழக்குத் தொடர்ச்சி மலைகள் செறிந்தும் மிண்டைந்தும் நிமிர்ந்தும் குவிந்தும் கிடக்கின்றன. ஆறுகளில் நமக்குக் குறைவுண்டா? மலைகளில் நமக்குக் குறைவுண்டா? காடுகளில் நமக்குக் குறைவுண்டா? சுரங்கங்களில் நமக்குக் குறைவுண்டா? எதிலே நமக்குக் குறைவு? கட்டி கட்டியாகப் பத்தரை மாற்றுப் பசும் பொன்னை அள்ளித் தருகின்ற தங்க

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

30—10—48 சனிக்கிழமை

# தந்தையும் மகனும்

"பெட்டிச் சாவி என்னிடம் இருப்பதால் சரக்கு எதுவும் காணாமல் போய்விடாது. பத்திரமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஒரே ஆளிடம தொடர்ந்தாற்போல் ஆண்டுக்கணக்காக சாவி இருந்தால் யாருக்கும் சலிப்பு வரத்தானே செய்யும். மேலும் வயதுவந்த மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுக்க வேண்டியதுதானே நியாயம். எனக்கும் வயது 70 தாண்டி விட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச் சாவியை வைத்துக் கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச் சாவியை இளைஞர்களிடம் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்."

—ஐயா

"பெட்டிச் சாவியை தன்னுடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான மகனிடம் (என்னிடம்) தந்துவிட்டதாக பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் பெட்டிச் சாவி கிடைத்து விட்டதே என்பதற்காக அதை நான தாறுமாறாகப் பயன்படுத்திவிட மாட்டேன். ஒவ்வொரு முறை பெட்டியைத் திறக்க நேரும்போதும் தந்தையைக் கேட்டு உத்தரவு பெற்றுக் கொண்டுதான் அண்ணாதுரை பெட்டியைத் திறப்பானே தவிர தானாகத் திறந்துவிட மாட்டான்."

—அண்ணா

தலைவர் பெரியார் அவர்களும் அவர்தம் அருமைத் தளபதி அண்ணா அவர்களும் ஒருவர் பின் ஒருவராக இந்த அரிய வாசகங்களை வீசிய உருக்கமான காட்சியை அந்த ஈரோட்டு மாநாட்டில் ஈண்டியிருந்த ஆயிரமாயிரம் இளங்காளைகள் என்றும் மறவார்; தமிழ்நாடும் என்றும் மறவாது; வரலாற்றுச் சுவடியும் அதை மறக்க முடியாது; ஐயாவும் அண்ணாவும் கூட அதை மறக்க மாட்டார்கள்.

பெரியார் அவர்கள், அவருக்கு இயல்பான அந்தக் கொச்சை வார்த்தை உச்சரிப்பால், தழதழத்த குரலில், மெதுவாக, வார்த்தை வார்த்தையாக, அந்த அழகிய வெண்தாடியை அசைத்தவண்ணம், எதிரே பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருந்த மக்கட் கடலைப் பார்த்துப் பார்த்து மனம் பூரித்தவண்ணம், "பெட்டிச் சாவியை என் அன்பு மகனிடம் கொடுத்து விட்டேன்" என்று இன்ப உரை பகர்ந்தபோதும், அண்ணா அவர்கள், புன்முறுவல் பூத்த முகத்தோடு, கணீர் என்று ஒலிக்கும் தம இசைக் குரலாலே, பத்துப் பாட்டு போன்ற இன்மொழியாலே, தந்தைபால் தனக்குள்ள அன்பையும் மதிப்பையும் அளவு கடந்த பாசத்தையும் பற்றுதலையும் வெளிக்காட்டும் விதமாக, கேட்பவர் உள்ளத்தெல்லாம் களிப்புத் தேன் பாயும் முறைதனிலே, ஒவ்வொரு முறை பெட்டியைத் திறக்கும்போதும் தந்தையின் உத்தரவைப் பெற்றுக் கொண்டுதான் அண்ணாதுரை பெட்டியைத் திறப்பானே தவிர தானாகத் திறக்க மாட்டான் என்று நன்மொழி நவின்றபோதும், மகனிடத்தில் தந்தைக்கிருக்கும் அன்புடன் பிணைந்த நம்பிக்கையும் பற்றுதலும், தந்தைபால் மகனுக்கிருக்கும் பாசமும் நேசமும், இருவரிடத்தேயும் ஒத்த அளவில் காணப்படும் பெருந்தன்மையும் சான்றாண்மையும், பந்தலில் குழுமி இருந்த அனைவர் உள்ளத்தையும் உருக்குவனவாயின.

தந்தை மகனைப்பற்றிப் பேசிய காலை, "இவரல்லவோ தந்தை; இப்படியல்லவோ ஒரு சிறந்த தந்தை இருக்க வேண்டும்" என்ற எண்ணமும், மகன் தந்தையைப்பற்றி மகிழ்ச்சியுரை வீசியஞான்று, "இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த அன்பு மகனல்லவோ ஒரு தந்தைக்கிருக்கவேண்டும்—வாழிய இத்திருமகன்!" என்ற சிந்தனையும் அனைவர் உள்ளத்திலும் அலைமோதின.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருப்பச் செயல்"

என்றார் திருவள்ளுவர். அந்த இலக்கணத்திற்கு அரியதோர் இலக்கியமாயினர் பெரியார். தன் ஆசைமகனை—அருமை அண்ணாவை—தமிழர்க்கெல்லாம் தளபதியாய் இருக்கும் ஒப்பற்ற வீரனை—தமிழ்நாட்டு பெர்னாட்ஷாவை இன்று திராவிடர் கழகத் தோழர்கள் மட்டுமல்ல, சுயமரியாதை இயக்க நண்பர்கள் மட்டுமல்ல, கட்சி வேற்றுமையின்றி, கருத்து வேற்றுமையின்றி, வேறு எந்த வேற்றுமையும் பாராது, தமிழ் நாட்டுப் பெருமக்கள் எல்லோரும் அண்ணா அண்ணா என்று அன்புடன் புகழ்கின்ற அற்புதத்தை பெரியார் தன் கண் முன்னால் காண்கின்றார்—களிக்கின்றார்—செல்வத் திரு மகனே நீ வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றார்—அண்ணாவின் புகழ் எங்கணும் ஒளி வீசும் மாட்சி கண்டு நெஞ்செல்லாம் பூரித்துப் போகின்றார். தன் மகனை நாடெல்லாம் புகழும் நன்னிலை எய்தச் செய்வதே—மக்கட்கெல்லாம் பணி புரியும் மகத்தான தலைமைத் திருவினை எய்தச் செய்வதே—அவையத்து முந்தி இருப்பச் செய்வதே தந்தை மகனுக்காற்றும் உதவி எனில் அந்த உதவியை அற்புதமான முறையில், வேறு எத் தந்தையும் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு, தன் மகனுக்குச் செய்திருக்கிறார் பெரியார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அந்தப் பொல்லாத பெரும் புலவர் திருவள்ளுவர் தந்தை மகற்காற்றும் உதவிக்கு மட்டும் தானா 'குறள்' அமைத்துச் சென்றார்—இல்லை இல்லை—மகன் தந்தைக்காற்றும் நன்றி எத்தன்மைத்ததாய் இருத்தல் வேண்டும் என்பதற்கும் அரிதினும் அரியதோர் இலக்கணம் வகுத்துத்தான் இருக்கிறார். பெரியாரின் பெருமாட்சிக்கு ஒரு குறள் அமைத்தவர், அண்ணாவின் அற்புத சக்திக்கு ஒரு குறள் அமைக்காமல் இருப்பாரா — அமைத்திருக்கிறார் — மிக நன்றாக அமைத்திருக்கிறார்—முன் உரைத்த குறளின் சிறப்புக்கு ஒத்த சிறப்புடைய குறள் ஒன்று இதற்கும் தீட்டி இருக்கிறார், ஆமாம! "**மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்!**" என்று உரைத்த சொல் மூலம் நம் அருமை அண்ணாவை அழகுறப் படம் பிடித்துள்ளார் திருவள்ளுவர்.

**வெளிவந்துவிட்டன!**

**பாசறையின் புது நூல்கள்!**

ந. சி. கந்தையா தீட்டிய

**திராவிடம் என்றால் என்ன** 0 6 0

**ஆரியத்தால் விளைந்த கேடு** 0 6 0

தனித்தனி தபாற் செலவு 0 1 0

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு,
சென்னை.

"அடே அப்பா! ஆள் மூன்றடி மூன்று அங்குலம் இருந்தாலும் பொல்லாத பேர்வழியப்பா! ஒரே வார்த்தையில் எதிரிகளைக் திக்கு முக்காடச் செய்துவிடுகிறார்!"

"இவர் ஒருத்தரே போதுமே இவர் கட்சிக்கு!"

"இவருடைய பரம எதிரி கூட இவர் பேச்சை ஒருமுறை கேட்டால் போதும், கட்டாயம் பணிந்துவிடுவான்."

"இராமசாமி நாயக்கர் லேசானவர் அல்ல' சார்! எவ்வளவு அற்புதமான மாணிக்கத்தைக் கண்டுபிடித்திருக்கிறார் பாருங்கள்!

"ஆமாம் சார்! அந்தக் காந்திக்குக் கிடைத்த ஜவஹர் இ[illegible] அண்ணா என்றுதான் சொல்ல வேண்டும். வேறென்ன சொல்வது!"

"வைதீக வட்டாரத்திற்கோ அணுக்குண்டு இவர்!"

"அல்ல அல்ல புத்துலகச் சிற்பியின் வலதுகரம்!"

"இல்லை! பெரியார் என்ற லெனினுக்குக் கிடைத்த ஸ்டாலின்!"

"தப்பு! தமிழ் நாட்டு பெர்னாட்ஷா இவர்! ஆம், அதுதான் சரி!"

நாட்டிலே, பலதிறப்பட்ட கட்சியினர் நடுவிலே, நாளும் நாளும் நடமாடும் உரையாடல் துணுக்குகள் இவை.

இவையே சாலும், அண்ணா மகன் தந்தைக் காற்றும் நன்றியை நன்கு நிறைவேற்றி இருக்கிறார் என்பதை விளக்க! வாலிப உள்ளங்களின் வசீகரத் தென்றல் என விளங்கும் அண்ணாவைப் பார்க்கும் போதெல்லாம், வான் மழை முழக்கம் என அவர் வீசும் வீர உரைகளை மக்கள் செவிமடுக்கும் போதெல்லாம், புதிய புதிய திறமைகள் நாளும் நாளும் அவரிடத்திலே முகிழ்த்தெழுந்து நாட்டுக்கும் இயக்கத்திற்கும் புதுப் புது பணி புரியும் பெற்றிதனை எண்ணும் போதெல்லாம் எண்ணும் போதெல்லாம், கரும்பெனத், தேன் என பாகு என பருப்புஎன இனிக்கும் அவர் எழுத்தினை தம் விழிகள் தாவ இதயத்தால் அதை வாசிக்கும் போதெல்லாம் வாசிக்கும் போதெல்லாம், மக்கள், இத்தகைய பேரறிஞரை, புரட்சித் தலைவரை, செந்நாப் புலவரை, தமிழர்தம் உள்ளங்கவர் உத்தமரை, தன் அருமைத் தளபதியாய்ப் பெற்றிருக்கும் தலைவர் பிரான் பெரியாரின் பேறு அம்மம்ம பெரிது பெரிது என்றெண்ணி களிப்புறாது இருக்க முடியுமோ?

அண்ணா என்றவுடனே மக்கள் உள்ளத்தில் பெரியாரின் புரட்சி உருவம் நிழலாடுவதும், பெரியார் என்ற சொல் கேட்டதும் தமிழர் நெஞ்சிலே அண்ணாவின் தமிழ் வடிவம் இடம் பெறுவதும், தமிழகத்தில், இந்நாள், சர்வசாதா

(12-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வயல்கள் நமக்கில்லையா, நெல்லும் மணியும் கொழிக்கின்ற கழனிக் காடுகள் நமக்கில்லையா, உலகத்தையே விலைக்கு வாங்கக்கூடிய மதிப்புடைய மாணிக்க மலைகள் நமக்கில்லையா? என்ன இல்லை நமக்கு? மைசூர் தங்க வயல்களைப் பற்றியும் ஐதராபாக்கத்தின் மாணிக்கமலைகளைப் பற்றியும் யான் விரிவுரை ஆற்ற வேண்டுவதில்லை ஐதராபாத்தின் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் திராவிட நாட்டில் சேரும். அங்கேதான் மாணிக்க மலைகள் நிறைந்துள்ளன.

திராவிடநாட்டிலே மற்ற எல்லா கனி வகைகளும் உள்ளன, ஆனால் இரும்புதான் இல்லை என்கின்றனர் சிலர். அதை யான் ஒப்புவதில்லை. இரும்புக் கனிகளும் திராவிட மண்ணிலே உண்டு உண்டு உண்டு என்று யான் மும்முறை கூறுகின்றேன். தக்க முறையில் ஆராய்ச்சி நிகழ்த்தப்படுமேல் திராவிடநாட்டில் இரும்புச் சுரங்கங்களின் இருப்பு கண்டு பிடிக்கப்படுவது உறுதி உறுதி.

நம் நாட்டில் இரும்புக் கனிகள் இல்லை என்றே வைத்துக்கொண்டாலும் அதனால் குறை ஒன்றுமில்லை எந்தெந்த நாட்டில் எந்தெந்தப் பொருள்கள் இயற்கையில் கிடைக்கவில்லையோ அந்தந்த நாட்டில் அவ்வப் பொருள்களை செயற்கையில் செய்தே தீரவேண்டும் என்பது இக்கால விஞ்ஞானக் கொள்கை. Geology என்று சொல்கிறார்களே நில நூல், அதன் துணைகொண்டும் ,விஞ்ஞானத்தின் துணைகொண்டும் நாம் இரும்பையும் நம் நாட்டிலே உண்டுபண்ணுவது இயலாதது அன்று. விஞ்ஞானத்தைக் கருவியாகக் கொண்டால் நாம் இரும்பு இல்லையேல் இரும்பை உண்டுபண்ணலாம். வெள்ளி இல்லையேல் வெள்ளி உண்டுபண்ணலாம். தங்கம் இல்லையேல் தங்கத்தையும் உண்டுபண்ணலாம். சில மலைகளையே வேண்டுமானாலும் தங்க மலைகள் ஆக்கலாம். இடைக்காலத்தில், நம்மிடம் இல்லாத பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கிக்கொண்டு, அவற்றிற்கு ஈடாக அவர்களிடம் இல்லாத பொருள்களை நாம் அளித்து பண்டமாற்று செய்துகொள்ளலாம்.

துறைமுகப் பட்டினங்களோ திராவிடநாட்டுக் கடலோரம் எங்கணும் சூழ்ந்துகிடக்கின்றன. உள்நாட்டிலே உள்ள நகரத்தைப் **பட்டணம்** என்றும், துறைமுகம் படைத்த கடலோர நகரத்தைப் **பட்டினம்** என்றும் அழைப்பது தமிழர் மரபு. நாகப்பட்டினம், சென்னைப் பட்டினம், காவிரிப்பூம் பட்டினம் என்றெல்லாம் வரூஉம் சொற்பெயர்களை நோக்குக.

காடு—மலை—ஆறு—கடல்—வயல்—நிலம்—மக்கள் எல்லாம் நமக்கு ஏராளம். ஒரு நாடு தனி ஆட்சி செலுத்துவதற்கு இன்னும் என்ன வேண்டும்?

வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையே பலதிற வேற்றுமை உண்டு. இந்த வேற்றுமையினூடே ஒற்றுமை அரும்புதல் அரிது, அரிது.

வடநாட்டுக் கலை வேறு. நம்முடைய கலை வேறு. இதை விளக்க ஆயிரம் எடுத்துக் காட்டுகள் கூறலாம். நேரத்தின் அருமை கருதி ஒன்றை மட்டும் குறிப்பாகக் கூறி மேலே செல்ல விழைகிறேன்.

நமக்கு—தமிழருக்கு—தென்னாட்டவருக்கு— திராவிடருக்கு அறம் பொருள் இன்பம் **மட்டும்தான்** உண்டு. ஆனால் வடநாட்டவர்க்கோ அறம் பொருள் இன்பம் வீடு என்று நான்கு உண்டு. இந்த வீடு—மோக்ஷம்—முக்தி நமக்கு இல்லை.

“அடடா! திரு. வி. க. வும் கெட்டுவிட்டாரா, சூனமான ஆய்விட்டாரா?” என்று சிலர் கூறக்கூடும். அதுபற்றிய கவலை எனக்கில்லை. நான் எத்தனையோ ஆண்டுகட்கு முன் கூறி இருக்கிறேன், இப்போதும் கூறுகிறேன். என்றைக்குத் தமிழகத்தில் “வீடு” வந்து நுழைந்ததோ, என்றைக்கு இந்த உலகம் மாயை என்ற போலி வேதாந்தம் தமிழரிடை புகுத்தப்பட்டதோ, அன்றே தமிழகம் தாழ்ந்தது; தமிழ்க் கலை மாண்டது; திராவிடக் கலை மறைந்தது.

தமிழ்க் கலையின் இரண்டு பகுதிகள் காதலும் வீரமுமே ஆகும். இவை இரண்டும் இல்லையேல் தமிழ்க் கலை இல்லை.

இவற்றில், குறிப்பாக, ‘காதல்’தான் தமிழகத்தின் உயிர்—ஆன்மா காதலைப் பறித்தால் வாழ்வு இல்லை, தமிழகம் இல்லை. ஆனால் நான் பல முறை கேள்விப்படடேன், நம் கல்வி அமைச்சருக்கு திருக்குறளில் உள்ள காமத்துப் பால் பிடிக்கவில்லை என்று! காமத்துப்பால் நீங்கிய திருக்குறளே வேண்டும் என்கிறாராம் அவர். இவ்வண்ணம் இவர் போன்றார் தமிழ்க் கலையின் உயிர் நாடியைச் சிதைக்கத் தொடங்குவராயின் என் போன்ற கிழவர்களும் உணர்ச்சி பெற்றெழுந்து போர்க்களத்தில் இறங்குவதில் என்ன வியப்பு?

உலகம் அநித்தியம்—மிராஷ்—Illusion — மாயை என்று சொல்லி மேலே பார்க்கிறார் மந்திரி. இனி, ஆணும் பெண்ணும் கூட மாயை ஆதலின் இனி ஆண்களும் பெண்களும் உலகத்தில் இருத்தல் கூடாது என்று சட்டம் இயற்றினாலும் இயற்றுவார்போலும்! ஆண் பெண் சேர்க்கை தவறு என்னும் கொள்கை தமிழ் நாட்டில் நுழைந்தபோதுதான் தமிழ்நாடு—தென்னாடு வீழ்ச்சி பெற்றது என்பது என் கொள்கை.

நீங்கள் திராவிடநாடு திராவிடநாடு என்கிறீர்களே தெலுங்கர் கன்னடர் மலையாளிகள் ஆதரவு இதற்கு உண்டா என்னும் கேள்வி யாண்டும் கேட்கப்படுகின்றது. கடல் மடை திறந்தாற்போல் விரிவுரையாற்றவல்ல நம் இளைஞர் ஏறுகளை அங்கெல்லாம் அனுப்பி பிரசாரம் செய்தால் கட்டாயம் அவை தமிழ் நாட்டுடன்தான் சேரும். இப்போது இல்லை எனினும் மொழி வழி மாகாணங்கள் அமைந்த பின்னர் அவர்களிடையே திராவிட நாட்டுணர்ச்சி தோன்றவே போகிறது, இதுபற்றி எவரும் ஐயுறவேண்டுவதில்லை.

தெலுங்கர்கள் இப்போதே **அச்ச தெலுங்கு** (தூய தெலுங்கு, வடமொழி கலவாத தெலுங்கு) வேண்டும் என்கிறார்கள். அச்ச தெலுங்கு இயக்கம், அச்ச மலையாள இயக்கம், அச்ச கன்னட இயக்கம் எல்லாம் வளர்ந்து வருகின்றன. இவற்றின் வளர்ச்சி எதிலே சென்று முடியும்? திராவிடநாடு திராவிடருக்கே என்ற எண்ணத்தில் சென்று முடியும்.

தெலுங்கு தெலுங்கு என்கிறார்களே அப்படி என்றால் என்ன? தெலுங்கு=தமிழ்+வடமொழி. அல்லவா? தமிழிலே வடமொழி கலந்ததால் உண்டான மொழிதானே தெலுங்கு? ஆகவே தெலுங்கிலிருந்து வடமொழி குறைந்தால் மிச்சம் இருப்பது தமிழ் தமிழ் தமிழ் அல்லவா? தமிழரோடு இவ்வளவு நெருங்கிய தொடர்புடைய தெலுங்கர் எப்படி நம்மைவிட்டுப் பிரியமுடியும்! கலை, கலாசாரம், மொழி, வாழ்6

வழி அனைத்திலும் ஒன்றுபட்ட நாம் இருவரும் எப்படிப் பிரியமுடியும்? "அச்ச தெலுங்கு காவல" என்கிற இயக்கம் வலுத்து வலுத்து, மொழிவழி மாகாணங்கள் அமைந்த பிறகு, நாளடைவில் தெலுங்கர் தமிழருடன் சேர்ந்து திராவிடநாடு அமைத்தே தீர்வா.

பல இடங்களில் சொல்லி இருக்கிறேன், இங்கேயும் சொல்கிறேன், திராவிடநாடு வந்தே தீரும். அதிகம் போனால் பத்து ஆண்டுகளுக்குள்—நான் அதற்குள் சாகமாட்டேன்—எனக்கு மரணத்தின்மேல் நினைப்பே கிடையாது—10 ஆண்டுகளுக்குள் திராவிடநாடு வந்தே தீரும்.

ஏதோ இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சினையினால் அவர் அங்கே இருக்கிறார்—மொழி அளவிலேதான் அவர் அங்கே போய் இருக்கிறார் என்று சொல்கின்றனராம் சிலர். இல்லை! இல்லை! மொழி அளவிலே இல்லை, திராவிடநாட்டு எல்லை அளவிலே நான் போய் இருக்கிறேன், சோஷலிசத்தின் அடிப்படையிலே திராவிடக் குடியரசு அமையவேண்டும் என்ற இலட்சிய அளவிலே நான் போய் இருக்கிறேன்.

நான் எதிலே இறங்கினாலும் ஆய்ந்து ஓய்ந்து பார்த்துதான் இறங்குவது வழக்கம். சிந்தித்து சிந்தித்து மிக நன்றாக சிந்தித்துப்பார்த்துதான் இறங்குவது வழக்கம். இப்போதும் பிரச்சினையை ஆய்ந்து ஆய்ந்து ஆய்ந்து ஆய்ந்து பார்த்து விட்டுத்தான் இறங்கி இருக்கிறேன்.

இறங்கிவிட்டேன். இனிப் பின் வாங்கமாட்டேன். திராவிட நாட்டைப் பெற்றே தீர்வது என்ற உறுதியை இனி ஒரு நாளும் கைவிட மாட்டேன்.

சிலர், திராவிடநாடு வந்தால் எல்லாம் நாஸ்திகமாகுமே என்று அச்சப்படுகின்றனராம். அந்த அச்சம் அநாவசியம். திராவிட நாட்டில் எல்லா மதங்களும் இருக்கலாம். அவரவருக்கு அவரவர் மதத்தைப் பின்பற்றும் உரிமை நிச்சயமாக் உண்டு என்று யான் உறுதி உரை புகல்கிறேன்.

பலதிறப்பட்ட இயக்கங்களிலிருந்தும் விடுதலை பெற்று ஒதுங்கி இருந்து மோனத் தொண்டு புரிந்து வந்த என்னை இயற்கை சும்மா விடவில்லை. கூப்பிட்டது; டாக்டர் ராசன் வாயிலாகக் கூப்பிட்டது. பக்கிங்காம் மில் தொழிலாளர் போராட்டத்தின் மூலமாகக் கூப்பிட்டது! யான் வாளா கிடப்பது இயற்கைக்குப் பிடித்தமில்லை போலும். பக்கிங்காம் மில் போராட்டம் படிப்படியே திராவிடநாட்டுப் பிரிவினைப் போராட்டத்திற்கு என்னை அழைத்து வந்துவிட்டது.

பக்கிங்காம் மில் போராட்டம் முடிந்து விட்டதா? முடிந்துவிட்டது என்று அந்தத் தொழிலாளர்கள் ஒருக்கால் கருதக்கூடும். ஆனால் அஃது இன்னமும் முடியவில்லை என்பதே என் கருத்து. அவ்வளவு விரைவில் முடியக் கூடியதல்ல அந்தப் போராட்டம். என் அருமை நண்பர் பெரியார் அவர்களின் உள்ளக் கருத்திலே அரும்பிய திராவிட நாடு, மலர்ந்து, காய்த்து, கனிந்து, என் அரும்பெரும் ஆசிரியர் சிங்காரவேலர் அவர்கள் போற்றி வளர்த்து வந்த சோஷலிச தத்துவத்தின் வளர்ச்சியை அது காணும் போதுதான் இந்தப் போர் முடியும்; தொழிலாளர் போர் முடியும்.

பக்கிங்காம் மில் தொழிலாளர் போராட்டம் வீறிட்டெழுந்தபோது எனக்குத் துணைபுரிய பலர் வரவில்லை. என் நண்பர் பெரியார் அவர்கள்தான் உவகையுடன் வந்து கலந்துகொண்டார். திராவிட நாட்டுப் போராட்டத்திற்கும் பக்கிங்காம் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பை விளக்க இதுவே போதும்.

அன்று சென்னை காங்கிரஸ் மந்திரி சபை, பக்கிங்காம் மில் தொழிலாளர் எழுச்சியை அடக்க எழுந்தது. இன்று, எல்லா இந்திய காங்கிரஸ், பாட்டாளிகளின் இயக்கமாகிய தொழிற்சங்க காங்கிரசையே நசுக்க முந்திவிட்டது. என்றையதினம் தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் என்ற போட்டிச் சங்கம் அமைத்து உண்மைத் தொழிலாளர் சங்கத்தை ஒடுக்குதற்கு காங்கிரஸ் கட்சி முன் வந்ததோ அன்றையதினமே காங்கிரஸ் கட்சி இனி செத்துவிடும் என்று நான் முடிவு கட்டிவிட்டேன். அந்த முடிவுக்கேற்ப காங்கிரஸ் உண்மையிலேயே செத்துவிட்டது என்று நான் கூறினால் அது மிகையாகாது.

திலகர் வளர்த்த காங்கிரஸ், C. R. தாஸ் போற்றிய காங்கிரஸ், சுபாஷ் போஸ் இருந்த காங்கிரஸ், காந்தி காங்கிரஸ் — அந்தக் காங்கிரஸ் செத்துவிட்டது. பிணம் புதைக்கப்பட்டும் ஆய்விட்டது. அதற்கான ஈமச் சடங்குகளும் செய்தாகிவிட்டன. அந்தச் சடங்குநாள்தான் அண்மையில் நடைபெற்ற ஆகஸ்டு 15 முதலாண்டு சுதந்தர விழா!

ஆயினும் இப்போது ஒரு காங்கிரஸ் இருக்கிறது. அதைச் சாகடிக்கவே நீங்களும் நானும் முயன்று வருகிறோம். அது எது? அதுதான் படேல் காங்கிரஸ்! தொழிலாளர் இயக்கத்தை நசுக்கும் காங்கிரஸ்! அடக்குமுறைகளை நம்பி வாழும் காங்கிரஸ்!

சர்தார் படேல், போட்டி தொழிற் சங்கம என்ற கப்பலைக் கட்டி கடலில் விட்டபோதே, இனி காங்கிரசை ஒழித்தே தீரவேண்டும் என்று நான் உறுதி செய்துகொண்டேன். இந்திய கண்டத்தில் உள்ள 30 கோடி மக்களையும் ஒரே ஒரு ஒத்தை மனிதர் தன் இருப்புக் காலின்கீழ் போட்டுத் துவைப்பதை நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? வடநாட்டார் வாளா கிடக்கலாம். பிறர் கிடக்கலாம். ஆனால் நாம் சும்மா இருக்க முடியாது திராவிடர், சும்மா இருக்க முடியாது. யார் எப்படிப் போனாலும் நான் சும்மா இருக்க மாட்டேன். இந்த காங்கிரசை—படேல் காங்கிரசை — பாசிச காங்கிரசை வீழ்த்தியேதீருவேன்.

சென்ற ஆண்டு விடுதலை வந்தது—முழு விடுதலை அல்ல, ஒரு வித விடுதலை—ஆனால் அந்த விடுதலையையும் படேல் காங்கிரஸ் கொன்றுவிட்டது.

காந்தியடிகள் கொண்டுவந்த சுயராஜ்யம் இப்போது இல்லை. அது "எமலோகம்" சென்றுவிட்டது. இப்போதிருப்பது படேல் ராஜ்யம், பாசிச ராஜ்யம்.

சோவியத் ரஷ்யா உருவானவுடனே லெனின் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் இனி தொழிலாளருக்கு இன்னின்ன உரிமை உண்டு என்று நிரல் நிரலே உரிமைகளைப் பொறித்து வைத்திருந்தார். அதுபோன்ற தோர் அறிக்கையை நேரு விடுவாரா? நேரு விரும்பினாலும் படேல் அதை அநுமதிப்பாரா?

இன்று உள்ள ஆட்சியை, சிலர், சுய ஆட்சி என்று கூறுகின்றனர். இது பொருந்தாது, பொருந்தாது, பொருந்தாது. தன் வாழ்நாளெல்லாம் காங்கிரசிற்கே உழைத்து அலுத்த இராமசாமிப் பெரியார் இந்த ஆட்சியிலேதான் விசாரணையின்றி சிறையிலே கிடந்து வாடினார். இந்த ஆட்சியா சுய ஆட்சி? இந்த ஆட்சியா விடுதலை ஆட்சி?

நானும் பெரியாரும் ஒரே நாளில் ஒரே விநாடியில் தான் காங்கிரஸை விட்டு விலகினோம். சென்னை காஸ் மோபாவிடன் கிளப்பில், 1924-ல், நானும் டாக்டர் வரதராசலு நாயுடு அவர்களும், பெரியாரும், கலந்து பேசித்தான், மூவரும் காங்கிரசைவிட்டு விலகினோம். பெரியார் உடனே விலகிவிட்டார். நாயுடு அப்படி இப்படிப் போய் பிறகு எப்படியோ போய்விட்டார். நான் காங்கிரசைவிட்டு விலகினேன் என்றாலும் அதை எதிர்க்கவில்லை. இந்தியா விடுதலை பெறும் வரை காங்கிரசை எதிர்த்தல் கூடாது என்பது என் கருத்து ஆகஸ்டு 15 எப்போது வரும் வரும் என்று காத்துக் கொண்டு இருந்தேன். அந்த ஆகஸ்டு 15 வந்தது. வந்தும் காங்கிரசிற்கு Good bye என்றேன்.

விடுதலை—ஒருவித விடுதலை—கிடைத்து ஓர் ஆண்டு தான் முடிந்தது. அதற்குள் காங்கிரஸ் இப்படி சாகும் நிலை தேடுமா? இதை நினைத்தாலே உள்ளம் வேதனைப் படுகிறது. அந்தோ! நாங்களெல்லாம் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கிரஸ் இப்படியா ஆக வேண்டும்?

சென்னையில் அண்மையில் முனிசிபல் தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் பெயரால் ஆளை நிறுத்தவே அஞ்சினார்கள். எல்லைக் கமிட்டி என்று பெயர் வைத்தார்கள். எல்லைக் கமிட்டியை சென்னை வாக்காளர்கள் பாதாளத்தில் ஆழப்போட்டு புதைத்துவிட்டார்கள், இப்போது எல்லைக் கமிட்டி தேசிய முனிசிபல் கட்சியாக உருவம் பெற்று இருக்கின்றது. 80 பேர் உள்ள நகர சபையில் இவர்கள் பெற்றுள்ள இடம் 19 தான்! அதுவும் திராவிடர் கழகம் இம்முறை தேர்தலில் கலந்து தொண்டாற்றவில்லை என்பதால்தான் 19 கிடைத்தது. திராவிடர் கழகம் தேர்தலில் நேரிடையாக ஈடுபட்டு தொண்டாற்றியிருந்தால் காங்கிரசிற்கு 19ம் வராது ஒன்றும் வராது. சைபர் [0] தான் வரும்!

இந்தத் தேர்தல் எதை அறிவிக்கின்றது? காங்கிரசிற்குச் செல்வாக்கு குறைந்துவருகின்றது என்பதை அறிவிக்கின்றது நாகரிகமுள்ள நாடுகளில் இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் உடனே அமைச்சர்கள் பார்லிமெண்டைக் கலைத்து, பதவியைவிட்டு விலகிவிடுவர். ஆனால்.........இங்கே...............அப்பா! இவர்களா ?.........சட்டசபையைக் கலைப்பார்களா? .........அட்டைபோல உடும்புபோல அல்லவா பதவிகளைப் பிடித்துக் கொண்டுள்ளனர்.

இனியும் அதிகம் பேசிக்கொண்டே போக விழைகிறேனில்லை. பாலகங்காதரதிலகர் 1924ல், "வெள்ளையன் காலை இனி வருடமாட்டோம் Home ru'e is our Birth Right" என்று முழக்கமிட்டார். அஃதே போன்று இன்று யான் கூற விழைகிறேன், "Dravidarad is our Birth Right, வடநாட்டார் காலை வருடமாட்டோம்!"

இந்தியா ஒருக்காலும் ஒரே நாடாக இருக்கப் போவதில்லை. பாகிஸ்தான் சென்ற ஆண்டே பிரிந்து விட்டது வங்காளம் ஒரு வழியாக இனிப் பிரிந்து போய்விடும். மஹாராட்டிரமும் பிரிவினை கேட்கிறது. அசாமும் தனித்திருக்க விழைகிறது. ஏதோ தங்கள் ஆள் ஒருவர் அதிகார பீடத்தில் இருக்கும் காரணத்தால் குஜரத் சும்மா இருக்கிறதே தவிர, நாளடைவில் அதுவும் பிரிவினை கேட்கவே போகிறது. எனவே அப்போதே தனித் தனி இனங்களின் வட்டாரங்களை இனித்தனியே பிரித்து தனித்தனி அரசுகளை அமைத்துவிட்டு, அவற்றை நட்பு முறையில்—அதிகார முறையில் அல்ல, அன்பு எனும் சங்கிலி கொண்டு பிணைக்க மத்திய சர்க்கார் முன்வந்தால் நல்லது. முன் வருமா? வராது. நிச்சயமாக வராது. எனவேதான் நாம் திராவிடநாடு தனிநாடு என்று முழக்கமிடுகிறோம்.

இன்னொன்று. வடநாடு விரைவில் சோஷலிசத்தை அடையாது. வடநாட்டின் மனப் பண்பு சோஷலிசத்திற்கு மாறாக உள்ளது. ஆனால் திராவிடனுக்கோ கலையின், மொழியின், நாட்டின் அடிப்படையிலேயே சோஷலிச விதை ஊன்றப்பட்டுள்ளது. ஆகவே திராவிடநாடு தனியே பிரிந்துவிட்டால், அது சோஷலிசத்தை விரைவில் அடைந்துவிடும். இதற்காகவும் நாம் பிரிந்தாகவேண்டும்.

தேர்தல் வந்தால்—அது எப்போது வருமோ நமக்குத் தெரியாது: ஓர் ஆண்டில் வருமோ, ஈராண்டில் வருமோ, மூவாண்டில் வருமோ, அறியேன்—தேர்தல் வந்தால், அதில் முழுமூச்சாக ஈடுபட்டு, சட்டசபையை முற்றிலும் நாம் கைப்பற்றிவிட்டால், பின்னர் திராவிடநாடு வேண்டும் என்று நாம் யாரையும் கேட்க வேண்டுவதில்லை. நம் தலைவர் பெரியார், திராவிட நாடு நம்மது—நாம் அதை எடுத்துக்கொண்டோம் என்று சொல்லிவிடுவார், அவ்வளவுதான்.

நேற்று தன் தலைமையுரையில் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் தோற்றுவாயாக ஒன்று குறிப்பிட்டார். அக்டோபர் திங்கள் சோவியத் புரட்சி நடைபெற்ற சிறந்த நாள், அதே நாளில் நம் மாநாடு நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார். இது பொருள் செறிந்த கருத்து. இதனை திராவிடத்தோழர் ஒவ்வொருவரும் கருத்தில் இருத்தி கடன் ஆற்றுவராக.

அவர் குறிப்பிட்ட அந்த அக்டோபர் திங்கள் தொடர்ந்து நடந்து வருகிறது. மறுபடியும் பெரும் போராட்டம் எழ இருக்கிறது. இந்தப் போரில் ஒரு பெரியாரும் ஒரு தளபதியும் சிறைச்சாலைக்குப் போவார்களேயானால் அவர்களைப் பின் தொடர்ந்துவர லட்சக் கணக்கான பெரியார்களும் தளபதிகளும் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்பதை இந்த சர்க்காருக்கு நினைப்பூட்டுகிறேன்.

இந்த ஒரு சில வார்த்தைகளோடு நான் இதோ திராவிடநாடு படத்தைத் திறந்துவைக்கப் போகிறேன்.

நான் திறந்துவைக்கப்போகும் படம் எங்கே இருக்கிறது என்று நீங்கள் சுற்று முற்றும் பார்க்கலாம். படம் ஏதும் காணோமே என்று திகைக்கலாம். நான் திறக்கப்போகும் படம் திரைச் சீலைமீது வண்ணக் கோலால் தீட்டப்பட்டதல்ல. உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பெரியாரின் உழைப்பெனும் கோலால் தீட்டப்பட்டுள்ள திராவிடநாட்டுப் படத்தைத்தான் நான் இப்போது திறந்துவைக்கிறேன்.

இறுதியாக என்னுடைய சிறிய விண்ணப்பம் ஒன்று.

உங்களுடைய தியாகத்தால், தைரியத்தால், தீரத்தால், துணிகரமான வீரச் செய்ல்களால் திராவிட நாடு தனி நாடாக அமைந்ததும்—அது விரைவிலேயே அமையும் என்பது என் கருத்து—அந்தத் திராவிட நாட்டுக் குடியரசைத் திறந்துவைக்கும் பேற்றினை எனக்கு அளிக்கவேண்டுமென்று தலைவர் பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**வாழ்க பெரியார்!**
**வெல்க அவர் முயற்சி!**

# ஆளவந்தார்களே, அறியுங்கள்!

ஆளவந்தார்களே, அறியுங்கள், ஐதராபாத் போராட்டத்தின் காரணமாக சென்ற ஒரு மாத காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த தமிழர் அறப்போர் நவம்பர் இரண்டாம்தேதி முதல் மீண்டும் ஆரம்பமாகிறது.

ஊராள வந்தவர்களே கேளுங்கள், பச்சைப் பசுங் கிள்ளைகளின் உள்ளத்தில் நீவிர் புகுத்தும் இந்திக் கொடுமையை வேரோடு கல்லி எறிவதற்காக ஆற்றல் மிகு தமிழர்கள் அறப்போரில் ஈடுபடுகின்றனர்மீண்டும்.

அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் உரிமை பெற்றுள்ள "உததமர்களே" உணருங்கள், தமிழன் தொடுக்கும் இந்த அறப்போர் நியாய பலத்தின் மீதுதுவக்கப்படுவதால் இதனைத் தோற்கடிக்கச் செய்யும் ஆற்றல் உலகத்தில் எந்த சக்திக்குமே கிடையாது

சிறைச்சாலை மதிற்சுவரை நம்பி கட்டாய இந்தித் திட்டத்தை வலுக்கட்டாயமாக நுழைக்கும் அமைச்சுக் குழுவினரே நினைத்துப் பாருங்கள், தன்னை ஊட்டி வளர்த்த தாய்மொழியையும், தன்னைப் பெற்று வளர்த்த கலாச்சாரத்தையும் காட்டிக் கொடுப்பதைவிட மகத்தான துரோகம் மாநிலத்தில் வேறு இருக்க முடியாது.

துப்பாக்கிக் குண்டுகளையும் மலபார் போலீசையும் என்றும் சதம் என்றெண்ணும் ஓமந்தூர் ஆட்சியினரே பாருங்கள், இதோ ரஷ்ய வரலாறு—எதேச்சாதிகாரி ஜார் மண்ணிலே சாய்ந்த கதை! இதோ பிரஞ்சு நாட்டுச் சரித்திரம் — கொடுங்கோலன் லூயி தன் முடியையும் பிடியையும் இழந்து மரணப் படுகுழிக்குத் துரத்தப்பட்ட கதை.

மக்கள் உணர்ச்சியை மதிக்க மறுக்கும் மாபெரிய மந்திரிகளே நெஞ்சில் நிறுத்துங்கள், மனித உரிமையைத் தட்டிப் பறிக்கும் பாசிச ஆட்சி எதுவும் உலகத்திலே இன்றுவரை நெடுநாள் நிலைத்ததில்லை!

இராவண காவியம் என்றால் மிரண்டு, போர்வாள் நாடகம் என்றால் நடுங்கி, "விடுதலை" தினசரி என்றால் பதைத்து, இரணியன்காதை என்றால் அலறிப் புடைக்கும் "அரசாளப் பிறந்தவர்"களே, ஒரு சேதி! கடல் அலையைக் குறுந் தடிகொண்டு அடக்க எண்ணுவது புத்திசாலித்தனமல்ல, பித்தத்தின் முதிர்ச்சி!

கருப்புச் சட்டையைக் கண்டால் மிரட்சி அடைந்து நடுங்கும் தேசிய "ட்ரேட் மார்க்" அமைச்சர்களே தெரிந்துகொள்ளுங்கள், தமிழர் சமுதாயத்தில் தாளமுத்து நடராசன்களுக்குப் பஞ்சமில்லை. அடித்துக் கொல்லப்பட்டாலும் கொண்ட கொள்கையைக் கைவிட மறுத்த வேலாயுதங்களுக்கும் குறைவு கிடையாது, ஆகவே இந்திப் பலவந்தம் இந்நாட்டில் செல்லாது!

கூவம் அரண்மனையில் கொலு வீற்றிக்கும் சர்க்காரே, ஒரு வார்த்தை: தூங்குதல் போன்றது சாக்காடு, பின்னர், தூங்கி விழிப்பது எம் பிறப்பு; தீங்குள்ள இந்தியை யாம் எதிர்ப்போம்! உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் பங்கு எவ்வளவு சிறப்பானது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. திராவிட இளைஞர் உள்ளங்களை எல்லாம் அவர் எப்படி கைப்பற்றி விட்டார் என்பதையும் நான் சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட நமது அண்ணா அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிறார் என்றால் இதைப்பற்றி நான் என்ன சொல்ல இருக்கிறது?"

என்று **பெரியார் அவர்கள்** அண்ணாவை முன்மொழிந்தபோது குறிப்பிட்ட வாசகங்களை ஒருமுறை எண்ணிப் பார்க்கும் எவரும் இருவர்க்கும் இடையே பேதம் இருந்தது என்றோ இருக்க முடியும் என்றோ எப்படி எண்ண முடியும்? சிறு மனத்தாங்கல் ஏதேனும் இருந்திருக்கக்கூடும்—ஆனால் அது வேறு சேதி.

அருமைத் தந்தை தன் அன்பு மகனிடம் பெட்டிச் சாவியை மனமுவந்து, கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்ட திருமகன் "அப்பா, உம் அனுமதியின்றி பெட்டியை ஒருபோதும் நான் திறக்கமாட்டேன்" என்று உறுதி கூறிய உருக்கமான சம்பவம் ஈரோடு! தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள அற்புதமான பாசத்தை, அன்புப் பிணைப்பை, ஆசையை எடுத்துக் காட்டிய எழிலோவியம் ஈரோடு! தலைவர் உள்ளத்தை தளபதியும், தளபதியின் உள்ளத்தை தலைவரும் எவ்வளவு அருமையாக ஆட்சி செய்கிறார்கள் என்பதைச் சுவைபடச் சித்தரிக்கும் ஓர் அழகிய காவியம், ஈரோடு! அந்த ஈரோடு தமிழர் மனக் கண்ணை விட்டு என்றும் அகலாது!

---


வெளிவந்துவிட்டது!

**ஈரோட்டுப் பாதை!**

2-ம் பதிப்பு

சுயமரியாதை இயக்கம் வளர்ந்த விதத்தைச் சுவைபடச் சித்தரித்துள்ளார் **இளஞ்செழியன்**, இந் நூலில்.

விலை 0—6—0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு,


சென்னை 1.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ரண சம்பவங்களாகிவிட்டன. பெரியார் யார் என்று எவரேனும் கேட்டால் அவர் அண்ணாவின் தலைவர் என்று கூறுவதும், அண்ணா யார் என்று வினவப்பட்டால் அவர் பெரியாரின் தளபதி என்று உரைக்கப்படுவதும் தமிழர் மரபாகிவிட்டது. உண்மையிலேயே அண்ணா வேறுயாருமல்ல, பெரியாரின் இளமை உருவம்! பெரியாரும் யாரோ ஒரு இராமசாமி நாயக்கர் அல்ல, அண்ணாவின் முதுமைக் கோலம்! அண்ணா முன் ஒரு முறை வேறு எவர்பற்றியோ கூறிய வாசகம் ஒன்றை அவருக்கே பயன்படுத்துவதானால், பெரியாரின் பக்கத்தே அண்ணா நிற்பது கண்டு, ஆரியம், ஆல் விழுதுவிட்டது என்று எண்ணி நடுங்குகிறது. ஆம்! அந்த ஈரோட்டு வெண்தாடி வேந்தர் மண்ணிலே சாய்ந்தால் போதும், தாம் வளையைவிட்டு வெளியேறி நாட்டிலே காட்டு தர்பார் நடத்தலாம்—நம்மைத் தட்டிக் கேட்பவர் எவர் இருப்பார் என்று எண்ணிக் கொண்டிருந்த தர்ப்பாசூரர்கள், இதுபோது, அந்த எழுபதாண்டுக் கிழவரின் அருகே முப்பத்தைந் தாண்டுக் காளை ஒருவர் அவருடைய பிரதிபிம்பமென, அவருடைய புத்தம்புது வடிவமென, மாறிப் பிறந்த இராமசாமிப் பெரியாரென நிற்கக் கண்டு, கைகளைப் பிசைந்துகொள்கின்றனர்; கண்ணிலே நீர் அருவி பெருக்குகின்றனர்; உள்ளத்திலே வேதனைத் தேள் கொட்ட வருந்துகின்றனர்; அடடா நம் கனவு பொய்த்ததே—அந்த நாஸ்திக இராமசாமிக்குப் பிறகும் நம் தொல்லை தீராதே என்று சஞ்சல அந்தாதி வாசிக்கின்றனர். "பரப்பிரம்மங்கள்" ஏக்கத்தின் மேலீட்டால் இதுபோலக் கைகளைப் பிசைந்துகொள்ளும் அதே நேரத்தில், தமிழர் ஆநந்தப் பள்ளு பாடுகின்றனர், எம் தமிழ் வேந்தற்கோர் ஒப்பற்ற படைத்தலைவர் கிடைத்திருக்கிறார் இனி என்ன குறை எமக்கு, என்று எண்ணிக் களிப்புச்சிந்து இசைத்திடுகின்றனர், வாழிய பெரியார் வாழிய அண்ணா வாழிய தலைவர் வாழிய தளபதி என்றெல்லாம் மகிழ்ச்சி மேலீட்டால் வெண்பா பாடுகின்றனர். ஆமாம், அவர்கள் மகிழ்ச்சிக்குத்தான் எல்லை ஏது? அந்த மகிழ்ச்சிக்கோர் உவமைதான் ஏது?

அண்ணா—ஐயா! இருவர்க்கும் இடையே பேதமூட்ட சில பேதைகள் எண்ணினர்—அவர்கள் எண்ணம் சாய்ந்தது. விஷமிகள் தூவிய விதைகள் முளையிலேயே கருகின. இருவர்க்கும் இடையே 'பேதம்' இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறது என்பது மட்டுமல்ல, இருவர்க்குமிடையே பேதம் வந்தால் அந்தப் பேதத்தால் தாம் வாழலாம் என்று மனப்பால் குடித்து வந்த சிறு மதியாளர்தம் சித்த சலனத்திற்குச் சரியானதோர் சவுக்கடியும் தந்திருக்கிறது ஈரோடு. அன்புள்ள தந்தைக்கும் அவர்பால் அன்புள்ள மகனுக்கும் இடையே சிற்சில சமயம் மனத் தாங்கல் வருவதுண்டு—ஆனால் அதன் பெயர் பேதமல்ல, பிளவும் அல்ல, அது நீடித்து நிற்கக் கூடியதுமல்ல, இருவர்க்கும் உள்ள பொதுப் பகைவர்க்கு ஆக்கம் அணுவளவும் தரக் கூடியதும் அல்ல, காதல் மொழியிலே பேசுவதானால் அந்த மனத் தாங்கலுக்குப் பெயர் ஊடல்! காதலனுக்கும் காதலிக்கும் இடையே ஊடல் தோன்றுபபோது அந்த ஊடலை பேதமாகக் கொண்டு இருவர்க்குமிடையே சிண்டு மூட்ட "சின்னத் தலைகள்" சில எண்ணுமானால் அது அவர்களுடைய சிறு மதியைத்தான் புலப்படுத்துமே தவிர சிறிதேனும் பலன் தரும் என எண்ணுவது முதல் தரமான மடமை ஊடல் எழுவதற்கே காரணம் தலைவன் தலைவியர்க்கு இடையே இருக்கும் பாசம்தான். அந்தப் பாசத்தின் பல்வேறு விளைவுகளில் ஒன்றே ஊடல்! இதை உணராதார் ஐயாவுக்கும் அண்ணாவுக்கும் இடையே இரண்டொரு சமயம் ஏற்பட்ட ஊடலை பேதமாகக் கொண்டு, அந்தப் "பேதம்"

(4-ம் பக்கம் பார்க்க)



**படேல் என்னும் பிரதம தேவதை முன்னும், ஆச்சாரியார், நேரு முதலிய பக்க தேவதைகள் முன்னும், "ஓமந்தூராரை பதவியிலிருந்து விலக்கியருளும் தேவரீர்" என்று பிரார்த்தனை செய்கிறார் காமராசர்—டில்லிக்குச் சென்று! பிரார்த்தனை பலிக்குமா—பொறுத்திருந்து பார்ப்போம்.**

**Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar, at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)**